**එම්. යූ. එම්. අලි සබ්රි,** පා. ම.
**எம். யூ. எம். அலி ஸப்ரி,** பா. உ.
**M. U. M. Ali Sabry,** PC, M.P.
**විදේශ කටයුතු අමාත්‍ය**
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
**Minister of Foreign Affairs**


## ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி

புனித ரமழான் மாதத்தில் நாம் கடைப்பிடித்த தியாகங்கள்> நற்செயல்கள் அனைத்தையும் தொடர்ந்தும் பேணிவர இந்தப் புனிதமான ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் உறுதிபூண வேண்டும். ஒற்றுமை> அமைதி> தியாகம் பரஸ்பரத் தன்மை> பாரம்பரியங்களை கடைப்பிடித்தல் போன்றவைகளின் அடிப்படையில் பசித்திருந்து> விழித்திருந்து செய்த நல் அமல்கள் ஆண்மீகத்தை மேலும் வலுவடையச் செய்து> பூரணமான மனிதநேயம்> இரக்கத் தன்மை> விட்டுக்கொடுப்பு போன்றவற்றை எமக்கு கற்பித்துள்ளன.

உள்நாட்டிலும்> உலக அளவிலும் நாம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி சிந்திப்பதுடன்> இப் பெருநாள் தினத்தின் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில்> தேவையுடையோருக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் ஒன்றினைய வேண்டும்.

இலங்கையானது> பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பன்முகத்தன்மையில் காணப்படும் வலிமைக்கு சான்று பகரும் அதே வேளை> நம் முன்னேற்றங்களின் போது அமைதியான> வளமான மற்றும் இணக்கமான நாட்டை கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளுக்கும் இப் பெருநாள் தினம் வழிகோலாக அமையட்டும். உலகெங்கிலும் உள்ள எமது உறவுகளிடம் நட்புடனும்> நல்லெண்ணத்துடனும் இதனைத் தெரிவிக்கிறேன்.

ஒற்றுமையுடன் நாட்டின் வெற்றிக்காக பாடுபடும் நமது ஒவ்வொரு நிமிடங்களும்> ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்தனைகளாக அமைவதுடன்> காஸா மக்களையும் நமது பிரார்த்தனையில் உள்வாங்கி> அவர்கள் படுகின்ற சிரமங்களுக்கு நியாயமான மற்றும் அமைதியான தீர்வை பெற்றுக் கொள்ளவும் பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடனும்> உளத்தூய்மையுடனும் நாட்டின் எதிர்காலம் சிறக்க பிரார்த்திப்பதுடன்> ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியின்பால் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவும் எனது வாழ்த்துக்கள்.

ஈத் முபாறக்

**எம்.யு.எம் அலி சப்ரி, PC**
வெளிவிவகார அமைச்சர்